# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே,

[புத் - கூச] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ புரட்டாதி மீ கரு உ செவ்வாய்க்கிழமை (30 Sept. 1952) [இல - சஎ]

# தமிழ் வழி வந்த மலையாளம்

## இரு மொழிகளுக்கும் உள்ள தொடர்பு

### சொல் - அமைதி இடைநிலை :

மேற் குறித்தவை சொற்கள் பற்றியன. சொற்களின் அமைதியை இனி நோக்குவோம். இவ் அமைதியால் மொழிகளின் சம்பந்தமும் கால முற்-பிற்பாடும் நன்கு தெளிவாகும். எனவே இந்த அமைதியை மொழி நூல் அறிஞர் மிகவும் போற்றுவர். ஒரு வினைச் சொல்லை எடுத்துக்கொள்வோம். "அறிவிக்கின்றேன்" என்ற சொல்லில் "அறி' என்ற வினையடியோடு 'வி" என்ற பிறவினை விகுதியும், கின்று என்ற நிகழ்கால இடைநிலையும், "ஏன்" என்னும் தன்மையொருமை விகுதியும் உள்ளன. இதில் "கின்று" என்னும் இடைநிலை தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களிலும் காணப்படவில்லை. இடைக்காலத்திறுதியிலுள்ள இலக்கியங்களிலும் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலிலும் தரப்பட்டுள்ளது. மலையாளத்தில் இவ் வினைச் சொல் "அறியிக்கின்னேன்" என வந்துள்ளது. ஒன்று-ஒந்து என வருதல் போல "கின்றேன் என்பது கின்னேன்'' என வந்தமையும் வெளிப்படை. இதனால் இடைக்காலத்து இறுதியிலுள்ள தமிழ் வினைமுற்றின் அமைதியே பிராசீன மலையாளத்தில் காணப்படுகிறது.

### வேற்றுமை விகுதிகள்

இனி, பெயர்ச்சொற்கள் உருபு பெற்று வரும் சொல்லமைதியை நோக்குவோம். தொல்காப்பியத்தில் "அது'' என்பது 6-ஆம் வேற்றுமையின் உருபாகவோ சொல்லுருபாகவோ வழங்கியதில்லை. இடைக்காலத்து இறுதியில் இவ் வுருபுகள் தோன்றத் தொடங்கின. 'செருப்புடையடியர்' (அகம். 129) என்பனபோன்ற பிரயோகங்கள் சங்க காலத்து உளவேயெனின், ஈண்டெல்லாம் இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்து அதற்குரிய உடைமைப் பொருளில் வந்த உடைச்சொல்லாகும். மேற் காட்டியதற்குச் 'செருப்பினை யுடைய அடியினர்' என்பது பொருளாம். இதன்கணுள்ள 'உடை' ஆறும் வேற்றுமை யுருபு அற்று 'தம்முடைய தண்ணளியும்' எனப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் (கானல் வரி, 32) வருகின்றது. கம்பர் "நம்முடைச் சிலைகள் போல் நவியலாமோ" என்றனர் (யுத்த. மந்திர 80). ஈரிடத்தும் 'உடைய' 'உடை' என்பன 6-ஆம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளமை தெளிவு. மலையாள மொழியை நோக்கும் போது, அதில் 6-ஆம் வேற்றுமையுருபாக "உடெ" என்பது பிராசீன இலக்கியங்களில் காணப்படுகிறது. ராம சரிதத்தில் வரும் "மைதிலிதன்னுடெ" என்பது இதற்கு உதாரணம். இது வேண்டுமிடங்களில் இன்சாரியை பெற்று "ன்றெ" என மருவியும் வழங்கலாயிற்று. தமிழிலும் இவ்வுருபு இன்சாரியை பெற்று வருதல் மிகப் பிற்பட்ட வழக்கு. 'குதிரையினுடைய' என்பது உதாரணம். சாரியையின் அம்சமாகிய னகரவொற்றும் 'உடை' என்றதன் அம்சமாகிய 'டெ' யும் சேர 'ன்றெ' என மலையாளத்தில் எழுதப்படுகிறது. இதனால் இடைக்காலத்து இறுதியில் தமிழில் வழங்கிய 6-ஆம் வேற்றுமை யுருபே பிராசீன மலையாளத்தில் திரிந்து வந்தமை தெளிவாகும்.

### சொற் பொருள்

இனி, சொற் பொருளை நோக்குவோம். "எவன்" என்ற சொல் பண்டைத் தமிழில் "என்" "என்ன" 'யாது' என்ற பொருள்களிலேதான் வரும். 'சொலவது எவன்' என்பது சொல்வது என் என்று பொருள்படும். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்களே காணப்படுவன. இடைக் காலத்து இறுதியில் இப் பொருள்களோடு யாவன், யார் என்ற உயர்திணைப்பொருளும் காணப்படுகின்றது. "உயர்வற வுயர்நலம் அருளினன் எவன் அவன்" என்பது திருவாய்மொழி. மலையாள மொழியில் அதன் பண்டை நிலை முதற்கொண்டு யார் என்ற பொருளில் மட்டுமே இச் சொல் வழங்கி வருவதாகும். "எவன் ஒருத்தன்" என வியவகாரமாலையில் வருகிறது. எனவே இடைக்காலத்திறுதியில் தமிழில் தோன்றிய பொருளிலே தான் மலையாள மொழியில இச் சொல் வழங்குகிறது.

### மொழிநடை

இனி மொழிநடையை எடுத்துக் கொள்வோம். பண்டைக் காலத்துத் தமிழ்நடை உருபு முதலியன இன்றி மிகச் செறிவுற்றுச் செல்கிறது. இடைக் காலத்து நடை உருபுகள் முதலியன அங்கங்கே விரிந்து சிறிதளவு நெகிழ்ந்து செல்வதாகும். இதன் இறுதிக் காலத்தில் நெகிழ்ச்சி இன்னும் அதிகப்பட்டு வாக்கியங்களும் பூரணமாய் அமைந்து, பேச்சுவழக்கைப் பெரும்பாலும் ஒட்டிச் செல்கிறது. உதாரணமாக,

"வாசவன் மலரின் மேலான்
மழுவலான் மைந்தன் மற்றக்
கேசவன் சிறுவ ரென்ற
தன்மையோர்தம்மைக்கேளாய்
பூசலின் எதிர்ந்தே னென்றுய்
போர்க்களம் புக்க போதேன்
ஆசையின் கனியைக் கண்ணிற்
கண்டிலை போலும்" என்னும் கம்பன் செய்யுளைக் கூறலாம்.

இதனோடு

"அரசர்கள் கோனே மேன்மேல்
அருந்துயர் விடுத்தீ வண்ணம்
புரிதழ லாளே நண்ணிப்
போக்து மதல்ல காலம்;
இருபது கரங்கள் தந்தும்
இலங்க வேந்தனே யோரிக்கால்
கருதுக, சனக சோகம்,
கைக்கோள்க கோபமிப்போழ்"

என ராம சரிதத்தில் வரும் பாட்டை ஒப்பிடலாம். இங்ஙனமே,

"எனக்கு நீ செய்யத் தக்க
கடனெலாம் ஏங்கி யேங்கி
உனக்குநான் செய்வ தானேன்
என்னின்யா நுலகத் துள்ளார்"

என்ற கம்பன் செய்யுளையும் (இராவணன் சோகப். 39)

"எனக்குநீ சடங்கி னுலே
இயற்றுமோண் கருமமெல்லாம்
நினக்கு ஞான் செய்யுமாறு
நிறுத்திவைத் துயிரோ டேன்னே"

என்ற ராமசரித விருத்தத்தையும் (73, 10) ஒப்பு நோக்கலாம்,

மொழிநடை ஈரிடத்தும் பெரிதும் ஒத்திருக்கின்றது. எனவே இடைக் காலத்தின் இறுதியிலுள்ள எளிய தமிழ் நடையைச் சார்ந்து தோன்றியதே பிராசீன மலையாளப் பாட்டுக்களின் நடையென்பது விளங்கும். — செந்தமிழ்.

உ

## கேதீச்சர மேவினுர்

பூதியணி பொன்னிறத்தர் பூணநூலர்
பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர்காதர்
கேதிச்சர மேவினுர் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந்தீர்த்தென்னை யுய்யக்கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதிகுடியுளார் மீயச்சூரார்
வீழி மிழலையே மேவினுரே.

# தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரம்

## ஈழத்துப் பழமையின் எழில் மிகு சான்று

திரு. E. P. இராசையா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியதை திரு. S. தியாகராசா அவர்கள் தமிழில் ஆக்கியது

திருக்கேதீச்சரம் மிகப் பழைமை வாய்ந்தது. எல்லையில்லாப் பெருமைக்குரிய ஈழத் தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பெற்றது. இது இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் மன்னாரிலிருந்து சிறிது தூரத்தில் மாதோட்டத்துக்கு அணித்தாய் இருக்கின்றது.

அதன் பெயர் அடியாரொருவர் பெயராலமைந்தது என்று சொல்லப்படுகின்றது. நாகாசுரன் என்போன் மாறுவேடம் பூண்டு தேவர்களுடன் சென்று சிவபெருமானிடம் தேவாமிர்தத்தைப் பெற்றுண்டானென்பது கதை, சூரிய சந்திரர் இவன் ஏமாற்றியதை எடுத்துக்காட்டியதும் இறைவன் இவனை இரண்டு துண்டாய் வெட்டினார். நித்திய சீவாமிர்தம் ஏதுவாக இரு துண்டுகளும் உயிருடன் இயைந்தன. ஆனால் ஒரு துண்டு பாம்பின் உடலும் மானிடர் தலையும் உடையதாக மற்றது மானிடர் உடலும் பாம்பின் தலையும் உடையதாகி இராகு கேது எனப்பட்டு நவக்கிரகங்களுள் இரண்டாகி மக்கள்மீது தீமை விளைக்குந் தன்மையவாயின. சந்திர சூரியர் காட்டிக்கொடுத்த குற்றத்துக்குப் பழிவாங்கும் பொருட்டு அவற்றில் தீமை விளைக்கு முகத்தால் கிரகணங்களை இராகு கேதுக்கள் உண்டாக்குகின்றன என்று சிலர் பிழையாய் நம்புகின்றனர்.

அங்கம் ஒழி ஆக்காள்
அரவமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல்
மாதோட்ட நன்னகரில்
பங்கம் செய்த பிறை சூடினன்
பாலாவியின் கரைமேல்
செங்கண் ணரவசைத்தான்
திருக்கேதீச்சரத்தானே.

குறித்த கேது திருக்கேதீச்சரத்தில் வருந்தித் தவஞ் செய்தமையால் திரு—கேது—ஈசுவரம் எனும் பெயர் அமைந்தது.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரசியல் அலை

# உள்நாட்டு நிர்வாகம் ஒழுங்கீனமா?

## சுய ஆட்சியா? சுயநல ஆட்சியா!

**மக்கள் ஆட்சி மாட்சிமையானது அது கிட்டிவிட்டால் மண்ணுலகம் விண்ணுலகமாய்விடும்! என்றெல்லாம் சொன்னார்கள் தலைவர்கள். அந்த ஆட்சி வந்துவிட்டது .... .... ....**

ஆனால் நிர்வாகப் பொறுப்புள்ளவர்கள் சுய ஆட்சியைச் சுயநல ஆட்சியாக மாற்றிச் சர்வாதிகாரத்துவத்தை காண்பிக்கின்றார்கள் என்பது இப்போது சில இடங்களிலுள்ள கிராமச்சங்க பட்டினசங்க நகரசங்கச் சீர்கேடிலிருந் தறியக் கூடியதாகின்றது.

கிராமச் சங்கத் தலைவர்கள் எத்தனையோபேர் நெறிதவறாது கடமை ஆற்றுகின்றார்கள். ஆனால் அவ்வாறின்றிக் கிராமத்துக்கும் கிராமத்தவர்களுக்கும் மிகவும் பாதகமான முறையிற் கிராமச்சங்க நிர்வாகம் நடைபெறுவதனாற் சங்க நிர்வாகம் ஒழிந்து அரசினாதிகாரி நிர்வாகம் நடைபெறுவது நாட்டின் பிற்போக்குக்காகும் ஓர் அறிகுறியேயாகும்.

சங்க நிர்வாகத்திலே தலைவ[illegible] உரிமை வழங்குவதும் தலைவர் சங்க நிர்ணயத்துக்குள் நின்று நேர்மையோடு நிர்வாகஞ் செய்வதற்கு வேண்டிய முறையிற் சங்க அங்கத்தவர்கள் நிர்வாக முறைகளைப்பற்றி அவ்வப்போ தறியப்படாது தடுக்கப்படுவதுமே இந்தவிதச் சீர்கேட்டுக்குக் காரணமெனலாம்.

மாதாந்தக் கூட்டத்திலே வரவு செலவு கணக்கு வாசித்து அங்கீகரிக்கப்படுவதோடு ஒவ்வொரு தனிக் கணக்குக்காதாரமாகிய உத்தரவெழுத்துக்கள் யாவும் சங்க அங்கத்தவர்களின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டியதவசியம். அதோடு அரசாங்கக் கணக்குப் பரிசோதகர்கள் தங்கள் பரிசோதிப்பைக் கிரமமாகச் செய்தல் வேண்டும், இன்னமும் ஆண்டு முடிவில் வரவுசெலவுக் கணக்கு

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு புரட்டாதிமீ கரு உ செவ்வாய்க்கிழமை

## 'பணி' செய்வதா? பந்தம் பிடிப்பதா?

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தேவாரத் திருமொழிகள் இறைபணி நின்றார்வாய் எழுந்த பொன்னனைய சொற்கள். தொண்டாற்றுவது கடன் என்றும் ஆற்றிய தொண்டமைவதே அதன் சிறப்பென்றும் பொருள் போதரப் பாடினர் சொல்அரசர். எனவே பணிசெய்தல் என்னென்றும் பணி செய்வார் பண்பு எத்தகைத்தெனவும் எவரும் இனிது விளங்கக் கூடும். ஆனால் இம்மதிமொழி எழுந்த காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையில் மனித நிலை மாறிவிட்டதென்பதையும் மனிதன் மாயையினின்று விடுபடுவதை விரும்பாது அதனோடியைந்து நிற்பதையே நாடுகிறானென்பதையும் இந்தத் தொடர்பில் ஞாபகத்தில் வைத்துக்கொண்டே இந்நாளிற் பணி செய்வார்தம் பண்பை ஆராய்தல் வேண்டும்.

எங்கள் இலங்கையில் மாத்திரம் உள்ள தொண்டாற்றும் நிலையங்களைக் கணக்கெடுத்தால் இத்தீபகத்தில் வறுமையோ பிணியோ கல்லாமையோ களவோ கள்ளுண்ணலோ இதுவரையில் இல்லாதொழிந்திருக்க வேண்டும். உண்மையை நோக்குமிடத்து நிலைமை அவ்வாறில்லை. காரணந்தான் என்னையோ?

பணிசெய்தல் என்ன என்று தொண்டாற்ற முன்வருபவர்கள் அறியாமையே காரணம் எனக. தமக்குரியராகாது என்பும் பிறர்க்குரியராகும் தன்மைக்கு அன்பு வேண்டும். இந்த அன்பின்வழி வருவதே நட்பென்பர். 'அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு' என்றார் வாழ்க்கையியல் வகுத்த வள்ளுவனார். ஆகவே தொண்டாற்றுந் தூயபணியில் ஈடுபடுவார் ஊரவர்களின் நண்பர்களாகத் திகழ்தல் வேண்டுமென்பது பெறப்படும். பொதுசன நண்பர்களாக வுள்ளவர்களன்றோ அவர்தம் இடுக்கண் களைவர்? அன்னார் முகநக நட்புப் பூணார் அகநக நட்டல் செய்வர் அன்றோ? இந்நாளிலே சமூகத் தொண்டு முகநக நட்பாய் முடிவதை நேரு இராசகோபாலாச்சாரியார் போன்ற பேறறிஞர்கள் அடிக்கடி எடுத்துரைக்கின்றனர் என்றால் பணி செய்வார் பண்புடையரல்லர் என்றே பெறப்படுகின்றது.

ஊரிற் பஞ்சம் உண்டானால், பிணி அதிகரித்தால் அதற்கு ஒரு மாபெருங் கூட்டங்கூடி பலர் சொற் பெருக்கிச் சில நிர்ணயங்களை நிறைவேற்றி விட்டால் அது நற்பணியாகாது. அன்றி, சமூக நிலையங்களில் வானொலி அமைத்து காதற் கட்டுரை வெளியீடுகளைத் தருவித்து மைதானத்தில் வயது வந்தவர்கள் கூடி வீண்பொழுது கழித்துவிட்டு ஆண்டுக்கொருமுறை ஒலிபெருக்கி மூலம் விழாக் கொண்டாடிவிட்டு அரசினர் சன்மானப் பணம் பெற்றுவிட்டால் அது நற்பணியாகாது. விளைபொருட் சங்கங்கள் வியாபாரஞ் செய்து இலாபங் காட்டுந் திட்டத்தைப் பிரசுரித்து வருடாந்தக் கூட்டத்தை விமரிசையாக நடத்திவிட்டால் அது நற்பணியாகாது. மொழிவிருத்திக்கழகங்கள் பழம்புகழ் பேசிவிட்டு ஆக்க வேலையிலமராது நின்றால் அது நற்பணியாகாது. மதபரிபாலனச் சபைகள் மக்களுக்கு சமயவுணர்ச்சி வரக்கூடிய வழித் தொண்டாற்றாது சாதாரண சங்கங்கள் போன்று அறிக்கைவாசிப்பதில் நின்றுவிட்டால் அது நற்பணியாகாது. இந்த விதமான சீர்கேட்டுக்கெல்லாங் காரணம் பணிசெய்ய முற்படுவார் தங் கருமம் பார்ப்பவர்களாயும் அத்தன்மையினாலே அதிகாரத்திலிருக்கின்றவர்களுக்கு உபசார ஊழியர்களாகவும் முன்வருதலே.

இனையர் இவரெமக்கு இன்னம்
யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு

என்ற அறமொழியைத் தொண்டாற்ற முன்வருவோர் அறிவார்களாக.

### கொழும்பில் மற்றொரு சர்வகலாசாலை

சர்வகலாசாலையிலேயே வசித்துப் படிக்கும் ஒழுங்குள்ள சர்வகலாசாலை போதனையிலிருக்கத் தங்கள் வீடுகளிலிருந்து நாள்தோறும் 2000 மாணவர் சென்று படிக்கக்கூடிய சர்வகலாசாலையொன்றைக் கொழும்பில் அமைத்தல் தேவையென சேர் ஐவர் ஜெனிங்ஸ் அவர்கள் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கின்றார்.

இதனால், இருவித சர்வகலாசாலை வழக்கங்களுண்டாகி ஒன்றையொன்று பார்த்துத் திருந்துவதற்கேதுவாகிச் செலவர்களல்லாதார் பிள்ளைகளுக்கு வேண்டிய உயர்ந்த கல்வி வசதியையும் உண்டாக்குவதாகும் எனவும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

# அம்மா! என அலறும் ஆடு கோழி!

— வழிப்போக்கன்

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9 15 மணியளவில் மருதனுமடம் இராமநாதன் கல்லூரிச் சந்திக்குப் போனேன். சந்தியின் ஒரு புறத்தில் ஒரு பெருஞ் சனக்கூட்டம். பல இடங்களில் ஆட்டுக் கடாக்களும் மறிகளும் கட்டப்பட்டிருந்தன, சிலர் சில கடாக்களையும் மறிகளையும் அந்த இடத்துக்குக் கொண்டு வந்தார்கள். கோழிகள் குறு குறு என்று சத்தமிட்டன. பலர் கோழிச் சேவல்களைக் கொண்டு வந்தார்கள். பக்கத்தில் ஒரு கோயில். வெள்ளை கட்டியிருந்தது. இளநீர்க் குவியல்களுமிருந்தன. அன்று மானம்பு, பெரியவர் அம்புபோடும் நாள். மானம்புவுக்காக மக்கள் திரண்டிருக்கிறார்களென்று நினைத்தேன். மானம்புக்காக ஆடு கோழிகளேன்? உற்றுப் பார்த்தேன். விளங்கவில்லை. எல்லாம் ஒரு மாயமான காட்சியாயிருந்தது. பக்கத்தில் நின்றவரைக் கேட்க நினைத்தேன். பயமாயிருந்தது. காட்சியைப்பற்றி என் மனத்திலுண்டான சந்தேகம், அதற்குக் காரணம். ஊரறியாதவரென்ற பகிடி கிளம்புமா? அல்லது உயிர்களைப்பற்றி எதுவாயினும் என் வாயில் வந்திடுமா? என்பது தான். ஆயினும் ஒருவாறு மனத்தை அடக்கி இது என்ன என்று கேட்டேன். ஒரு வேள்வியென்றார். இன்றைக்கு மானம்பு நாளல்லவா என்றேன். மானம்புக்தான் என்றார் என்ன கோயிலென்றேன் வயிரவர் கோயிலென்றார், போதும் ஐயம் நீங்கிவிட்டது. சொல்ல வேண்டியதில்லை.

இடம் இணுவில். பழந்தமிழ் மக்களின் உறைவிடம். பேரறிஞர் மிளிர்ந்த இன்றும் மிளிர்கிற இடம். சைவபானுவின் கதிரொளிகாலுகின்ற இடம். பெரியவா— பெருமான் அம்பு போடும் நாள். அம்பு போட்டு ஆணவ இருளாகிய அசுரனைக் கொல்லும் நாள். சைவபானுவின் கதிரொளி மிகுதுவிளங்கவேண்டியநேரம். ஆணவ இருள் அற்றுப் போக வேண்டிய காலம். ஆனால்? ... ... ... ...

அம்மம்ம! நெஞ்சம் பதைபதைத்தது? கோரச் செயல்கள்! கோரக்காட்சி!! மாக்கட்கூட்டம். மானிடராய்த்தெரியவில்லை. அடர்ந்த இருளில் அமிழ்ந்தி நின்றார்கள்.

என்னே சைவ மக்களின் நிலைமை! சைவத் தொண்டர்கள் இதைத் தடுக்க வழிகாண முடியாதுதானோ? "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சி— ஆங்கில்லை யூன் றின்பவர்க்கு" என்றபடி அருள் என்றது ஒரு சிறிது மில்லாது எம் சகோதரர் எம் மருகே யிருந்து வல்நெஞ்சராய் மிருக வாழ்க்கை வாழப் பார்த்துக்கொண்டு வாளாவிருப்போமா?

சைவப் பெருமக்களே! சைவச் சபையோர்களே!! அன்பாயும் தாழ்மையாயும் இதை உங்கள் முன்னிலையிலே சமர்ப்பிக்கின்றேன். சற்றுச் சிந்தியுங்கள்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல்
எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை
செய்யாய் பராபரமே"

[வழிப்போக்கனுடைய வாழ்க்கை வழி தெருக்களிலேதான் நடக்கிறது. வசதி வாய்த்த விடத்தில் உட்கார்ந்து விடுவார். அவர் ஓர் அறிஞர். தான் காண்கிற கேடுகளை இந்துசாதன வாசகர்களுக்கு அறியத்தர சம்மதித்திருக்கிறார். வாசகர்கள் அறிய விரும்புவனவற்றிற்குத் தான் அறிகிற அளவில் விடைகளும் தருவார். வழிப்போக்கன் இந்துசாதனம் மேற்பார்த்துக்கொடுக்கவும். (Valippokkan C/o Inthusathanam) என்றெழுதுக. ப—ர்.]

### இல் வாழ்க்கைக் கல்வி

வீட்டமைப்புக் கல்வியென்பது ஒரு உத்தியோக ஆயத்தமென்று நினைக்கக் கூடாது. அது இல்வாழ்க்கைக்குச் செய்யும் ஆயத்தம். கணவனையும் பிள்ளைகளையும் இன்புறச் செய்யும் வழி அறிதல் முதலாவதாய்ப் படிக்கவேண்டியது. இன்னும் படிக்கவேண்டியன பல உள. சமைத்தல் உடை ஒழுங்கு செய்தல் மாத்திரம் போதா. பொதுவாக இன்பமான இல்வாழ்க்கை வாழப் படிப்பதே உண்மையான வீட்டமைப்புக் கல்வியாகும் என்று ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் அவர்கள் சென்னையில் வீட்டமைப்புக் கல்விக் கூட்டமொன்றிற் பேசும்பொழுது கூறினர்.

### வெங்காயத்துக்கு வேண்டும் உரம்

வெங்காயச் செய்கை இலங்கையிலே விருத்தியடையத் தொடங்கியதும் வெங்காயம் விற்பனை செய்யத் தக்கதாக இடுதற்கு உமல்கள் தேவைப்பட்டன. இவையும் இங்கே இப்போ செய்யப்படுகின்றன. வெங்காய விருத்தி கூடக்கூட உமலிழைப்புங் கூடிக்கூடி இக் குடிசைக் கைத்தொழில விருத்தியடைவதாகும்.

### விசேட கூட்டுப் பிரார்த்தனை

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலையில் உள்ள காச நோயாளருக்காக ஒரு விசேட கூட்டுப்பிரார்த்தனை அங்குள்ள கூட்டுப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. உயர் திரு, க. வடிவேலுச்சாமியார் அவர்கள் மேற்படி கூட்டுப் பிரார்த்தனையை நடத்தினர்கள். அத்துடன் நோயாளருக்கு உகந்த முறையில் ஒரு சொற்பொழிவும் நிகழ்த்தினார். பிரார்த்தனையின்போது டக்டர் திரு. S. நடராசா அவர்களும் சமுகமாயிருந்தனர். திரு. க. கந்தசாமி அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுவாமியவர்களின் தூய பிரமசரிய துறவி நிலையையும் அவரது சமயத் தொண்டையும் பாராட்டிவிட்டு, டக்ரர். நடராசா அவர்களின் சமயப் பணியைப் பற்றிப் பேசும்போது, இன்று இலங்கையில் சைவத்திற்கு ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு டாக்டர் நடராசாவைப்போன்ற உயர்தர பதவிகளில் இருப்போரே காரணம் என்றும், அவர் தாம் சொல்லும் வைத்திசாலைகளில் கூட்டுப்பிரார்த்தனையை ஆரம்பித்து ஆதரவு காட்டுவதுடன் காச நோயாளர் நிலையத்தில் ஒரு பிரார்த்தனை நிலையம் நிறுவுவதற்கு முயற்சி செய்கின்றார் என்றும் குறிப்பிட்டனர். இவ் வைத்தியசாலையில் சென்ற ஒரு வருட காலமாக வெள்ளிக்கிழமைதோறும் நோயாளர்களால் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

எழுத்துப் பேச்சுச் சுதந்திரம் மற்ற இடங்களிலும் இந்தியாவில் மிக அதிகமென்கிறார் Dr. K. N. கட்ஜூ.

X X X

காஷ்மீர்ச் சிக்கல் தீர்க்கமுடியவில்லை என்கிறார் Dr. கிரஹாம்,

திருத்தொண்டர் திருநாள்

# திருநீறு சேர்ந்தாரை — — ஆதரித்த அரசன்

## நரசிங்க முனையரைய நாயனார்

பெருவளஞ் சிறந்த திருமுனைப்பாடி நாட்டை அரசாண்டு, திருநீறே தமக்குப் பெருஞ் செல்வமாகக்கொண்டு, சிவனடியார் திருவடியடைதலே அரும்பேறாகக்கொண்டு வாழ்ந்தார் நரசிங்கமுனையரைய நாயனார்.

அவர் சிவபெருமானெழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களில் நித்திய நைமித்தியங்களை வழுவாது நடத்துவித்து, திருவாதிரை நாட்களிலே சிறந்த பூசை செய்விததுச் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து ஒவ்வொரு சிவனடியாருக்கும் நூறு பொன் கொடுத்து வந்தார்.

ஒரு திருவாதிரை நாளிலே வழக்கப்படி பொன் கொடுக்கும்பொழுது, நிஷதவறிய குறி பொருந்திய மேனியையுடைய ஒருவர் திருநீறணிந்தவராய் வந்தார் மருங்கு நின்றவர் இகழ்ந்தொதுங்கினர். அதைக்கண்ட நாயனார் அவரெதிரே சென்று கைகுவித்து வணங்கிக் கொண்டாடிப் பேணினார். சீலமிலரென்றுன்னியிகழாது திருநீறணிந்தவரை உலகத்தார் பேணுமாறு முன்மாதிரியாக அவருக்கு இருநூறு பொன் கொடுத்து வணங்கி இன்மொழிகூறி யனுப்பினார்.

இவ்வாறு திருத்தொண்டு புரிந்து வாழ்ந்து சிவபெருமானுடைய செந்தாமரைத் திருவடி நீழலை யடைந்தார்.

"சீலம்இல ரேஎனினுந்
திருநீறு சேர்ந்தாரை
ஞாலம்இகழ்ந் தருநரகம்
நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த
படிஇரட்டிப்பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய
மொழிவிளம்பிவிடைகொடுத்
தார்"

"இவ்வகையே திருத்தொண்டின்
அருமைநெறி எந்நாளும்
செவ்வியஅன் பினிலாற்றித்
திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வாள் அரவணிந்தார்
பாதமலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின்
மீளாத நிலைபெற்றார்"

கம்பளை சஹிறாக் கல்லூரியில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்துடன் சிங்களம இரண்டாம் மொழியாய்ப் படிப்பிக்கின்றனராம். தமிழ் விடப்பட்டது.

X X X

சென்ற ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் 461 பாடசாலைகள் திறந்திருக்கின்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தலைச்சங்காட்டுத் தலச் சிறப்பு

நலச்சங்க வெண்குழையுந் தோடும்பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை யில்லாதீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கோள்சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே.

காவிரித் தென்பால் சோழ நாட்டில் நாற்பத்தைந்தாவது திருத்தலமாக விளங்குவது திருத்தலைச்சங்காடு என்னுந் தலம். இது திருமால் பூசித்து வழிபட்ட சிறப்பினது. சோலைகள் சூழ்ந்த காட்சியதாய் மிளிர்வது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பெற்ற சிறப்பினது. பெரியோர், தக்கோர், புரிநூன்மார்பர், தீயோங்கு மறையோர், தலையாய நால் வேதந் தரித்த மனத்தோர், தூயோர் ஆய சிரேட்டராம் அந்தணாளர்களது வாழ்வு மலிய இடம் இஃது எனத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பெற்றது.

ஆலயம் கிழக்கு நோக்கிய திருவாயிலொடு திகழ்கின்றது. இறைவன்: சங்கருணாதர். இறைவி: சௌந்தரநாயகி. இங்கு ஏனைய சிவாகமங்களில் உள்ள முறைமை போலவே விநாயகர், முருகன், இலக்குமி, தக்ஷிணாமூர்த்தி, சண்டேசர் முதலிய மூர்த்திகளும் உள்ளனர். திருமால் இங்கு இறைவனை வழிபட்டுச் சங்கம் பெற்றனர். கிருதிதிக்கில் திருமால் (சிலாவிக்ரக) வடிவம் ஒன்றும் இருக்கின்றது.

இத்தலம் ஆக்கூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே ஏறக்குறைய ஏழு கல் தொலைவில் உள்ளது. பஸ் வசதியுண்டு.

## செய்தித் திரட்டு

=O=

அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ட்ரூமன் அவர்கள் இந்தியாவுக்கு வர விரும்புகிறாராம்.

x x x

அரிசி அளவைக் குறைத்ததை எதிர்த்து 79000 பேர் கையொப்பமிட்ட பத்திரமொன்றை Dr N.M. பெரேரா அவர்கள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றார்.

x x x

காங்கேயன்துறைத் தேர்தல் மனுத்தீர்ப்புக் கொடுத்தல் பின் போடப்பட்டிருக்கின்றது.

x x x

தென் ஆபிரிக்க சத்தியாக்கிரகிகளுக்குக் கடுந்தண்டனைகள் விதிக்கின்றார்கள்,

x x x

சிறந்த ஆராய்ச்சி நிலையமொன்றை இலங்கையில் அமைப்பதற்கு வேண்டிய உதவி செய்ய உலக வங்கி முன்வந்திருக்கின்றது.

x x x

யாழ்ப்பாண மாவரி யாழ்ப்பாண நகரசபைக்காகவேண்டுமென்று நகரசபை கூறுகின்றது.

x x x

x x x

பண்டாரவளை சமசமாச இளைஞர், பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகவைத் தமது பதவியை வேறு தகுதியுடையவர்களிடம் கொடுக்கும்படி புத்தி கூறுகின்றனர். இருபத்தைந்து ஆண்டுகளாய் மின்னேரியாவிற் பெருந்தொகைப் பணஞ் செலவழித்தும் உணவுப்பகுதிக்கு உதவி வரவில்லையென்பதும், இப்பொழுது உண்டாயிருக்கும் உணவு நெருக்கடியும் அவர்களுடைய நியாயங்கள்.

## மாவுடன் சுண்டெலி மயிரா?

பிருத்தானிய விஞ்ஞானியர் கூட்டமொன்றிலே லண்டன் சர்வகலாசாலைப் பேராசிரியர் Dr. W. வார்ட்லோ அவர்கள் பேசும்போது உணவுப் பொருள்களுடன் பல உதவாப் பொருள்கள் கலக்கப்பட்டு

## அரசியல் அலை

முதலாம்பக்கத் தொடர்ச்சி

அச்சிடப்பட்டு அங்கத்தவர்கள் மூலம் கிராம வாசிகளுக்கறியப்படுத்தப்பட வேண்டும். ஊரில் என்ன அலுவல் செய்யப்பெற்றது எவ்வளவு செலவானது என்று ஊரார் அறிந்தால் உண்மையிலந்த வேலை செய்யப்பெற்றதா எவ்வளவு செலவு பிடித்திருக்கும் என்று உண்மையை யறியவும் அதற்கு வேண்டிய ஒழுங்குகளை எடுக்கவும் முடியும்.

### விசாரணை வேண்டுமென்கிறார்

—திரு. கெனமன்

### வேண்டாமென்கிறார்

—பிரதமர்

பிரதமர் வேட்டையென்ற மானபங்கம் விளைக்கும் பத்திரத்தைப் பற்றிப் பொலீசார் விசாரிக்க வேண்டுமென்றார் திரு. பீற்றர் கெனமன். இவ்விதமான பங்கம் விளைக்கும் செய்திகள் பத்திரிகைகளில் நாள்தோறும் காணக்கிடக்கின்றன. இவற்றைப் பொலீசார் விசாரிக்கத் தொடங்கினால் அவர்கள் வேறு வேலைசெய்ய முடியாதாகையால் விசாரணை செய்ய முடியாதென்கிறார் பிரதம மந்திரி.

## கற்றவர்க்கழகு

## கசடற மொழிதல்

வருதலைக் கண்டு தாம் மிகவும் அஞ்சுவதாகக் கூறினர்.

மேலும் பேசும்பொழுது ஒரு இறாத்தல் மாவுடன் 8 சுண்டெலி மயிர்களும் பிறிதொருவகை மாவுடன் 180 சுண்டெலி மயிர் வரையிலும் கிடந்ததாகத் தமக்குத் தெரிய வந்ததென்று கூறித் தமது கூற்றுக்கு ஆதாரங் காட்டினர்.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## கருகல் விளக்கமே கருகல்!

வித்துவான் திரு. த. வடிவேலு அவர்கள் "கருகல் கண்ட திருக்குறள் மாணவருக்கு விடை" என்னுந்தலை அங்கத்துடன் தந்துதவிய தமது விடையிலே பல புது ஆசங்கைகளைக் கிளப்பி யிருக்கின்றார். திருக்குறள் மாணவன் என்னும் எனது புனை பெயரே அதற்கு ஏதுவாயிருந்திருக்கின்றதுபோலத் தோன்றுகின்றது. மாணவன் என்றால் பள்ளிக்கூட மாணவன், அல்லது இதற்குமுன் திருக்குறளைப் பாராதவன் என்பது கருத்தல்ல! திருக்குறளானது தமிழ் மக்களின் பண்டை மதிவள உயர்ச்சி வாழ்க்கைப்பண்பாட்டுச் சிறப்பு ஆதியனவற்றைக் காணத்தரும் ஒப்புயர்வில்லாத் தனிச் சிறப்புவாய்ந்த தமிழ்ப் பெரும் நூல். இத்தகைய நூல் தரும் குறட் பாக்களின் நுண்ணிய கருத்துக்களை அறிந்துவிட்டேனென்று எடுகட்டாது மேன்மேலும் அறிய முயல்வது எனது வாழ்க்கையின் ஒரு உறுப்பு. அஃதே எனது புனை பெயருக்குக் காரணமே யன்றிப் பிறிதொன்றன்றென்பதை வித்துவானவர்கள் முன்னிலையில் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன். அது நிற்க, வித்துவானவர்கள் போன்ற அறிஞர் எழுதும்பொழுது இவ்வரிய நூல் தரும் ஆழ்ந்தகருத்துக்களை நன்கு ஆராய்ந்து வெளியிடுவரேல் இந்துசாதன வாசகர்கள் யாவரும் இன்புறுவார்களே என்னும் கருத்தையும் உள்ளத்திற் கொண்டு கருகல்கள் என்று ஒரு சிலவற்றைக் கூற நினைந்தேன். "மற்கட விலங்கு தன்னால்" என்று தொடங்கும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் எனது நினைவுக்கு ஆதாரமாயுள்ளது. என்னுடைய நோக்கம் தூயதே. பிறிதன்று.

### திருக்குறளும் திருநான்மறைமுடிவும் ஒன்றே

நிற்க, "மறைப்பொருள் மேற்கொண்ட காதலைத் திருக்குறளுரையுடன் முட்டவைத்தல் தக்கதன்றாம்" என்பது தக்கதன்று. மறைப் பொருளும் திருக்குறட் பொருளும் ஒன்றேயாம், எம் தமிழ்ப் பெருந்தேவி ஒளவைப் பிராட்டியார் "தேவர் குறளுந் திருநான்மறை முடிவும், மூவர் தமிழும் முனிமொழியுங் — கோவை, திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒருவாசகமென் றுணர்" என்றறிவுறுத்தியதனால் இது தெளியப்பெறும்.

### தமிழ் மொழியும் அழியுந் தன்மையது

இனி எடுத்தபொருளை ஆராயப் புகுதும். 'அ என்ற எழுத்தை முதலாகவுடைய தமிழ் மொழி, தோன்றிய காலந்தொட்டு இது வரை அழியாது நிற்பதுகொண்டே இனிமேலும் அழிந்தொழியப் போவதில்லை எனத் துணிபுரை கூறல்சாலும். தமிழ்மொழி ஆரியம் போன்று வீழ்ச்சியுறாது வளர்ச்சியடைவதையே காண்கின்றோம்" என்பது எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஆரியம் மாத்திரமன்று லத்தீன் முதலிய ஏனைய மொழிகளும் வழக்கொழிந்தன. அவ்வாறன்றி வளர்பிறைபோல வளர்ந்து வருகிறாள் தமிழன்னை, என்பது உண்மையே. அக் காரணத்தால் "இனிமேலும் அழிந்தொழியப் போவதில்லை" என்பது உயிர் வாழ்க்கையின் உண்மையுணர்வார் ஒப்புக்கொள்வதொன்றல்ல. "அவன் அவள் அது எனும் அவை மூவினைமையில்".

[அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டி யுணரப்படும் சொல்லும் பொருளுமாய இரு கூற்றுப் பிரபஞ்சத்தொகுதி தோற்றம் நிலை இறுதி யென்னும் முத்தொழிலுடைமையால்]

(சிவஞானபோதம்)

சொல்லும் —மொழியும் — இறுதியுடைத்து அல்லது அழிவது என்பது காண்க.

### இருவினை ஒழிக்க இறைவன் புகழ்புரிதல் வழி

"எனவே இருவினையும் விடாது செய்யுமொருவன் இறைவனின் பொருள்சேர் புகழ்புரிந்தோனுதல் இயலாமையே அறிவுடையோன் காண்டல்கூடும்" என்பது ஆசிரியர் கருத்துடன் வெளிப்படையாய் முரண்படுகின்றது. "இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன் — பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு" என்பதில் சேரா புரிந்தார் என்னுஞ் சொற்களைக் கவனிப்போம். சேரா என்பது எதிர்காலம்; புரிந்தார் என்பது இறந்தகாலம், எனவே இறைவன் பொருள் சேர்புகழ் முன்னர்ப் புரிந்தார்மாட்டு இருள்சேரிருவினையுஞ் சேரா - இனிச் சேரா என்று கொள்வலே பொருத்தமுடைத்து.

"சரியை கிரியா யோகங்களாகிய தவத்தினைச் செய்தவர்...... ஒரு தலையாக அவ்வத் தவப் பயன்களை எய்துதற்குரிய உலகத்தினை எய்தி ஆண்டு அவற்றை நுகர்ந்து வைகி மீள நிலத்தின் வந்து பிறத்தலைச் செய்தே எஞ்சிய வினைப்பயன்களை நுகர்ந்து விடயப் பற்றறுத்தற் பொருட்டு அவ்வாறு தவஞ் செய்து" ...

(சிவஞானபாடியம், பக். 354)

"எவர்க்குமிம் மலஞ் சேரவிக் கொழிபா திருப்பதென், னெனின்னல் கோள்பிறவித்—துவக்கெனுந் தம திருவினைப் பயனுந் துலை புகும் பொருளென நிறை நீசர்ந்தா — லவர்க்கு நம் பதங் கொடுத்திட ரொழிப்போ மது விலாத வாழுங்கி யவ்வளவும்— பவப் பெருக கடல் வீழ்வர் தம் பருவம் பார்க்கு மெம்மையும் தம்மையும் பாரார்"

"என்று கூடுமிப் பருவமென் றியம்பில் யாமிருந்தன விடந் தொறு மிறைஞ்சி — நன்றி சேர் சிவபுண்ணியம் புரியு நன்மை யாலிது நணுது மென்றறிதீ...."

"ஆவலா லெமக்காமலர் மரங்களாக்கல் ... ... ... றணப்பிலேந் புகழ் சாற்றல் ... ... ... இச் சரியை யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம"

(திருவாதவூரடிகள்புராணம்)

இங்கே தணப்பிலெம்புகழ் சாற்றல் முதலிய நன்றிசேர் சிவபுண்ணியம் புரியும் நன்மையால் தம திருவினைப்பயனும் துலைபுகும் பொருளென் நிறை நிகர்த்தல பெறப்படுகின்றது. இவ்விடத்திலேயே விருப்பு வெறுப்பற்ற நிலையாகிய இருவினையொப்பு நிகழ்வது. வினையொழிதல் இப்பொழுதேயாகும். எனவே, மேலே காணக்கிடப்பவை இறைவன் பொருள்சேர் புகழ் புரிதலே முத்தியது இருள்சேரிருவினையுஞ் சேராதொழிதல் — இருவினையொப்பு; பிந்தியது என்பதை இனிது விளக்குதல் காண்க.

## காலஞ் சென்ற - திரு. நா. சிவகுரு

நெடுங்காலம் இலங்கை ரேகுப் பகுதியில் உயர்ந்த உத்தியோகத்தமர்ந்து இளைப்பாறிச் சில நாட்களாக நோயுற்று ஆவணி மாதம் 29 ந் திகதி கொழும்பில் தமது இல்லத்தில் இறைவனடி யடைந்த திரு. நா. சிவகுரு அவர்களின் அந்தியேட்டிக் கிரியை முகத்துவார சங்கமதீர்த்தத்தில் உற்றார் நண்பர் சமூகத்தில் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

காலஞ்சென்ற திரு. சிவகுரு அவர்கள் மனைவி வண்ணார்பண்ணை திரு. இ. சிவகுருநாதர் M. B. E. அவர்கள் சகோதரன் காலஞ்சென்ற திரு. இ. சிவசுப்பிரமணியம் அவர்களின் புத்திரி, Dr. V. இராசநாயகம், Dr. T. வாமதேவன் இவருடைய சிரேட்டகனிட்ட புத்திரிகளை மணஞ்செய்துள்ளார். சர்வகலாசாலையிற் கற்கும் திரு. சி. தர்மவரதர் இவரது சிரேட்ட புத்திரராவர்.

இறந்தவர் பிரிவாற்றாது துயருறும் மனைவி மக்கள் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக ஈந்த ரூபா பத்தும் பெற்றும். திரு. சிவகுரு அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

## நவராத்திரிப் பூசைகள்

### காரைநகரில்

காரைநகர்ப்பாவில் சைவபரிபாலனவித்தியாலயத்தில்சென்ற ஞாயிற்றுக்கிழமை (28-9.52) சரஸ்வதிபூசை, வித்தியாரம்பம் முதலியவை சிறப்பாக நடைபெற்றன. அத்தருணம் பாலபண்டித வகுப்பும் ஆரம்பிக்கப் பெற்றது.

### கண்டியில்

மத்திய மகாணச் சைவ மகா சபை மண்டபத்தில் 19 - 9 - 52 தொடக்கம் பூசை ஆராதனைகள் நடைபெற்று 27-9-52 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் திரு. A. K. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையும் திரு. S. சேதுகாவலர் அவர்களால் நவராத்திரி என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவும் பூசை ஆராதனைகளுடன் நடைபெற்றன.

### குருநாகலில்

சென்ற (27—9—52) சனிக்கிழமை மாலை 6 - 30 மணி தொடக்கம் குருநாகல் சைவமகாசபை மண்டபத்தில் சரசுவதிபூசையும் திரு. அருள் தியாகராசா அவர்களால் கல்வி என்னும் விஷயத்தில் ஒரு சொற்பொழிவும நடைபெற்றன.

### அன்பு கொள்க

'அன்பின் வழியதுயிர்நிலை யஃதிலார்க் — கென்பு தோல் போர்த்த வுடம்பு" என்றபடி அன்பின் வழி நின்றே இவற்றைக் கூறினேன். பிறிதின் வழியவாய்க் கொள்ளற்கு ஒருபோதும்உள்ளற்க,

'ஒருபொல்லாப்புமில்லை'. சுபம்.

திருக்குறள்-
மாணவன்,

வண்ணை,
29-9-52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மாதோட்டம்

பண்டைக்காலஇந்தியாவிலே கோயில்களைச் சுற்றி பட்டினங்கள் உண்டாயின. அவ்வாறே திருக்கேதீச்சரத்திலும் அமைந்தது. "மாதோட்டத்தர் மன்று பாலாவியின் கரையிற் கேதீச்சரம்" என்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரால் பாடப்பெற்றதாய் மாந்தை அல்லது மாதோட்டத்தினூடாய்ப் பாய்கின்றது, பாலாவியாறு கி. பி. முதலாம் நூற்றுண்டில் இந்த மாதோட்டம் சிறந்த துறைமுகத்துடன் அரசாங்க பீடம் அமைந்த இடமாயிருந்தது. இந்தியா, சீனு ஒருபுறமாக மற்றப்புறம் அரேபியா, ரோமாபுரி, கிரேக்கநாடு ஆகியவையாகக் கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே உலக வியாபாரத்தின் உயிர் நிலையமாய் விளங்கிற்று. மத்தியிலமைந்ததால், வங்காள விரிகுடாவுக்கும் அரேபியன் கடலுக்கு மிடையே போக்குவரவு செய்யும் வர்த்தகக் கப்பல்களின் பெரும் வழி அதிகாரத்தையுடையதாயு மிருந்தது. அது ஒரு பெரிய வர்த்தக நிலையமாயுமமைந்தது. இப்பட்டினம் சிறந்த மாடமாளிகைகள் கூடகோபுரங்களுடையதாகச் செல்வச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாயிருந்தது. இது விஸ்வகர்மாவின் உறைவிடமாயிருந்ததென்றால் இதன் சிறப்பைச் சொல்லவும்வேண்டுமா? இங்கே நாகர், அசுரர், இராக்கதர் ஆகியோர் தங்களுள்ளே மணவினைகள் செய்து வாழ்ந்தனர்.

இங்கே மூன்று விசேஷ கோட்டைகளிருந்தன. இரும்பு முத்து பொன் முதலியவற்றுடன் பால் நெல் முதலியனவும் பொலிந்துகிடந்தன. நுண்ணிய உடைகள் பெரும் புகழ் விளைத்தன.

### அருச்சுனன் மணமும் சிங்கக்கொடியும்

இந்த இடத்துக்கு அருச்சுனன் வந்தானென்றும் வந்தபொழுது நாக கன்னிகை அல்லியை மணம் புரிந்தானென்றுங் கருதப்படுகின்றது. இங்கே அருச்சுனன் வவ்ரவாகன் என்பானுடன் சமர் புரிந்தானென்றும், சமர் நிகழும்பொழுது வவ்ரவாகன் சிங்கத்துடன் பனை எழுதப்பட்ட தன் கொடியை உயர்த்தினுனென்றும் அறியவருகின்றது. வட இலங்கையின் பண்டைக்கால நாக அரசரே பனையுடன் விரவிய சிங்கக் கொடியைத் தங்கள் கொடியா யுயர்த்தினரென்பது இங்கே கவனித்து இன்புறற்பாலது.

### மண்டோதரியும் திருக்கேதீச்சரமும்

இராவணன் தேவிமண்டோதரி திருக்கேதீச்சரப் பெருமானை அன்புடன் வழிபட்டு வந்தாள். அவ்வழிபாட்டின் பயனுய்த் தான் வேண்டும்பொழுது எவ்விடத்திலாயினும் இறைவன தோன்றியருளும் வரத்தை வேண்டிக் கொண்டாள். ஒருகாலிராவணு ழிலை ஆல சென்றபின் படுக்கையிலிருந்து திருக்கேதீச்சரப் பெருமானைச் சிந்தித்துப் போற்றினுள். இளம் இராக்கதனுருவங்கொண்டு பெருமான்தோன்றியருளினுர். சாட்சியைப் பெற்ற கனிகனிமிகுஞ யால் உரத்த குரலிற் பெருமானை விளித்துத் தோத்திரஞ் செய்தனள் மண்டோதரி. பக்க அறையின் படுக்கையி லிருந்த இராவணன் நிகழ்ந்தது என்னேவென அறியுமாறு விரைந்து சென்றுன். இறைவனுமொரு சிறுக்குழவியி னுருக் கொண்டருளினர். நின்றது தாதியர் மகவென வுன்னிச் சென்றுன் இராவணன்: பின் னைப்பெருமானும் மறைந்தருளினர்.

ஏர்தரும் ஏழுலகேத்த
எவ்வுருவக தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை
அழகமர் வண்டோதரிக்
[குப்
பேரருள் இன்பமளித்த
பெருந்துறை மேய
[பிரானை...."

என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

### கோயில் அழிந்தமை

இத்தலமும் அதற்கணிமையிலிருந்த நிலங்களும் நெருப்பாலழிக்கப்பட்டன என்று சிலர் நம்புகின்றனர். சலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டன என்று வேறு சிலர் கருதுகின்றனர். ஆனுல் காலத்துக்குக் காலம் போருக்கு வந்த சோழமன்னன படைகள் இவற்றை அழித்திருக்கலாமென்று கொள்ளுதற்கிடமுண்டு. அக்காலத்திலே வெற்றி பெற்றவர், தோல்வி யுற்றவருடைய நிலங்களை அழித்து உழுது பருத்தி, ஆமணக்கு முதலியன விதைத்தார்களெனப்படுவது இதற்கு ஆதாரமாகும்.

### இன்றைய கோயில்

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே சில சைவமக்கள் இந்நிலத்தை அரசாங்கத்திடம் பெற்று அந்நிலத்துட் கண்டெடுக்கப் பெற்ற இரு லிங்கங்களை ஸ்தாபனஞ் செய்தனர். இப்பொழுது திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபையார் பண்டைய நிலைமை எய்துமாறு இக்கோயிலைப் புதியதாயமைக்குந் திருத்தொண்டை மேற்கொண்டிருக்கின்றனர். இச்சிறந்த திருத்தொண்டிற் சைவ மக்கள் யாவரும் பங்குபற்றுதல் தகுதியுடைத்து.

---

## மூவார்புலவர் மணி திரு. S. பொன்னம்பலம் J.P

மலேயா ஜோஹூர் சமஸ்தானம் சட்டசபை அங்கத்தவராக இருந்தவரும்சமாதானநீதிபதியும் பெரியபுராண உரைநடைநூல் ஆசிரியருமான புலவர்மணி திரு. S. பொன்னம்பலம் அவர்கள் இப்பொழுது தனது சனன நாடாகிய யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றூர். இவர் மலாயாவில் நெடுங்காலமாகச் சைவத் தொண்டும் தமிழ்மொழித் தொண்டும்புரிந்துள்ளார். அண்மையில் பாரத நாட்டின் தவப்புதல்வனுன யோகி சுத்தானந்த பாரதியார் மலாயாவுக்குச் சென்றிருந்தபொழுது இவருடைய தமிழ்மொழி யறிவையும் சைவத் தொண்டையும் பாராட்டி இவருக்குப் 'புலவர் மணி' என்ற பட்டத்தை உதவியுள்ளார். இப்பொழுது இலங்கையின் பல பாகங்களுக்குச் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்து வருகின்றூர். இவர் புலோலிச் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் ஒரு பழைய மாணவராவர். இவர் இங்கு 15-10-52 வரை தங்கி மீண்டு மலாயாவுக்குச் செல்வர்.

---

## தெல்லிப்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த விழா

தெல்லிப்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த விழா சென்ற 21-9-52 மாலை 6-30 மணிக்கு திரு. வ. கந்தையா அவர்கள் தலைமையில் தெல்லிப்பளை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திற் கொண்டாடப்பட்டது.

திரு. டி. டி. கொண்டன் பிரித்தானிய தகவல் பகுதி உத்தியோகத்தர் அவர்களும் அவரது பாரியாரும் பிரதான பேச்சாளர்களாக வந்தனர், ஸ்ரீமதி கொண்டன விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பத்திரங்கள் வழங்கினுர்கள். அரசவாயில் முதலியார் திரு. சி. தியாகராசா அவர்களும், சனசமூகநிலைய மேற்பார்வையாளர் திரு. வீ. பீ கணேசபிள்ளை அவர்களும், யாழ்ப்பாண டிஸ்திறிக் சனசமூக நிலைய சமாசக் காரியதரிசி திரு. ஈ. பீ. இராசையா அவர்களும், தெல்லிப்பளைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. ரி. வீ. செல்லப்பா அவர்களும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினுர்கள்.

புது வருட உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:-

தலைவர்: திரு வ. கந்தையா
உபதலைவர்: திரு வ. விசயரத்தினம்
காரியதரிசி: திரு. எம். எஸ். சிதம்பரப்பிள்ளை
தனுதிகாரி: திரு. கே. வேலாயுதம்.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தரமான நகைகள் தருவதில் சிறந்தது | அழகான நகைகள் செய்வதில் சிறந்தது

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும், (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

நீங்கள் இளமைப் பருவத்தை யடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும்.
நீரழிவு பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)
M. 16. 25-4-52—25-10-52.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponne, Jaffna on Tuesday. September 30 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org